# சமாதான நீதவான் கையேடு

இது நீதி அமைச்சிற்கு சொந்தமான சொத்தாகும் அனுமதியின்றி எடுத்தல், அச்சிட்டு விநியோகித்தல் நீதி அமைச்சின் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து அச்சிட்டு விநியோகித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

MOJ

**சமாதான நீதவான் கையேடு: ஒழுங்குவிதிகள் மற்றும் நடத்தைக்கோவை**

இக்கையேடானது, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் 45 ஆம் பிரிவோடு சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் விதிக்கப்பட்ட **2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமித்தல், இடைநிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகளுக்கான** மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் அடிப்படையில், இலங்கையிலுள்ள சமாதான நீதவான்களுக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் நடத்தைக் கோவையைச் சுருக்கமாகத் தருகிறது .

MOJ

**உள்ளடக்கம்**


1 சட்ட முறைமை மற்றும் பதவிக்காலம் ........................... 01

2 நியமனத்திற்கான தகைமைகள் ....................................02

3 நியமனம் செல்லுபடியாகும் தன்மை மற்றும் பதவியில் சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளல் ..................................03

4 கடைமைகள், பணிகள் மற்றும் நடத்தைக்கோவை ................04

5 சமாதான நீதவான் ஒருவரால் ஆற்றப்படக்கூடாதவை.............07

6 தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் வாழ்நாள் சான்றிதழ் சமர்பித்தல் ...........................................08

7 நியமனத்தை இடைநிறுத்துதல் மற்றும் இரத்துச்செய்தல்...........09

8 ஒழுக்கக்கட்டுப்பாடு ..............................................10

9 பதவி விலகல் .............................................11

10 பொதுவான அறிவுறுத்தல்கள் ....................................11

11 அட்டவணைகள்..............................................12

MOJ

## 01. சட்ட முறைமை மற்றும் நியமனக் காலம்

### 1.1. தனிநபர்கள் அடிப்படையில் சமாதான நீதவான்களாக நியமித்தல்

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் கீழ் நீதிதுறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சமாதான நீதவான்களை (நியமித்தல் இடைநிறுத்துதல் இரத்துச்செய்தல் மற்றும் நடத்தைக்கோவை) ஒழுங்கு விதிகளுக்கான மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் அடிப்படையில் இலங்கையில் சமாதான நீதவான்களுக்குரிய ஒங்குவிதிகளுக்கு அமைவாக சிறந்த சமுக சேவையாற்றிய நபர்கள் மற்றும் சமுகத்தில் நன்மதிப்பைப் பெற்றுள்ள பிரசைகளுக்கு ஓர் மதிப்பளிக்கும் பதவியாக சமாதான நீதவான் பதவி வழங்கப்படுவதுடன் பதவிக்காலத்தில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் அடிப்படையில் இலங்கையில் சமாதான நீதவான்களுக்குரிய ஒங்குவிதிகளுக்குட்பட்டும் மற்றும் குறித்த சமாதான நீதவான் அப்பதவிக்குத் தகுதியற்றவரென அமைச்சரால் தீர்மானித்து கொள்ளப்படவில்லையெனின் சமாதான நீதவானொருவரான அனைவரும் எழுபத்தைந்து (75) வயது பூர்த்தியாகும் வரைக்கும் பதவி வகித்துக்கொள்வர்.

### 1.2. அதிகாரபூர்வமாக ஆள்களை சமாதான நீதவான்களாக நியமித்தல்

1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் 45 (1) ஆம் பிரிவின் கீழ், நீதிதுறைக்குப் பொறுப்பான அமைச்சரினால் முன்னர் பிரசுரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம், கடைமை நிமித்தத்தின் அடிப்படையில் அரச பதவிநிலைகளுக்கான உத்தியோகபூர்வ பதவிக் காரணியால் சமாதான நீதிவான் பதவி வழங்கப்படுவதுடன் இப்பதவிக்காலமானது 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சமாதான நீதிவான்கள் (நியமித்தல், இடைநிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக்கோவை) ஒழுங்கு விதிகள் மற்றும் அதன் பிந்தைய திருத்தங்களின் அடிப்படையில் இலங்கையின் சமாதான நீதவான்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு அப்பதவியை வகிக்கும் காலத்திற்கு மாத்திரமே உரித்துடையதாகும்.

## 2. நியமனத்திற்கான தகைமைகள்

2.1. **ஒரு நிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானொருவராக நியமிக்கப்படுவதற்கு பொருத்தமான நபர்** ஒருவரால் பின்வரும் விடயங்கள் பூர்த்தியாக்கப்படல் வேண்டும்.

• இலங்கைப் பிரசையாக இருத்தல்.

• முப்பது (30) வயதிற்குக் குறையாதவராகவும் எழுபத்தைந்து (75) வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்.

• சிறந்த பண்புடைய, உண்மையான நேர்மை மற்றும் சமுக அல்லது நாட்டு மக்களால் நன்மதிப்பும் நம்பிக்கையும் பெற்றவராய் இருத்தல்.

• அரசகரும மொழிகளுள் ஒன்றினை சரளமாகப் பேசவும், வாசிக்கவும் மற்றும் எழுதவும் தெரிந்தவராய் இருத்தல்.

• (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் காலத்திற்கு காலம் மாற்றப்படக்கூடிய வகையிலான பத்தாயிரம் ரூபாவிற்கு மிகைப்படாத தண்டப்பணம் விதிக்கப்படவேண்டிய குற்றமொன்றைத் தவிர்ந்த வேறேதேனும் குற்றவியல் குற்றச்சாட்டிற்காகவும் நீதிமன்றத்தில் குற்றவாளியல்லாத ஒருவராயிருத்தல்.

• கடனிறுத்தல் வகையறா நிலைமைக்கு உட்படாதவராய் இருத்தல்.

• சமூகத்திற்குச் சிறந்த சேவையாற்றியவராய் இருத்தல்.

• சிறந்த உடல் மற்றும் உள நிலையைக் கொண்டிருத்தல்.

• க.பொ. த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடன் வேறேதேனுமோர் பாடத்திலும் திறமைச்சித்தி உட்பட இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றவராயிருத்தல்.

• ஏற்கெனவே வழங்கப்பட்ட சமாதான நீதவான் நியமனம் இரத்துச் செய்யப்படாதவராய் அல்லது முடிவுறுத்தப்படாதவராய் இருத்தல்.

• *விசேட நிலைமை தொடர்பான குறிப்பு: விசேட சந்தர்ப்பங்களில் அமைச்சரது நம்பிக்கையின் அடிப்படையில், ஒருவர் சமூகத்திற்கு ஆற்றிய முன்மாதிரியான சேவை அல்லது விசேட திறமை அல்லது அனுபவத்தைக் கருத்திற்கொண்டு க.பொ. த. (உ/த) அல்லது சாதாரண தரம் கல்வித் தகைமையைக் கொண்டிராத அத்தகைய நபருக்கு எழுத்துமூலம் காரணங்களைக் குறிப்பிட்டு நியமனம் வழங்குவதற்கு அமைச்சரிற்கு இயலும்.*

**2.2. ஒரு அகில இலங்கை சமாதான நீதவானாக பொருத்தமான நபரொருவர் நியமிக்கப்படுவதற்கு பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:**

• *இலங்கைக் குடியரசின் சமாதான நீதவானொருவராக நியமிக்கப்படுவதற்கான தகைமைகள்.*

• *ஒரு நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவானாக ஐந்து (0*5*) வருடங்களுக்கு குறையாத காலத்திற்கு பதவி வகித்திருத்தல்.*

• *க.பொ. த உயர் தரப் பரீட்சையில் ஒரு (01) பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.*

*குறிப்பு: விண்ணப்பிக்கும் படிமுறைத் தகைமை பெற்றுள்ள நபரொருவர் எழுத்துமூலம் அமைச்சருக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்துடன் இருப்பதாக உறுதுப்படுத்தி இலங்கை மருத்துவ பேரவையில் பதிவுசெய்யப்பட்ட மருத்துவரொருவரால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்.*

**3. நியமனத்தின் செல்லுபடியான தன்மை மற்றும் பதவியில் சத்தியப்பிரமாணம் செய்தல்**

1978 *ஆம் ஆண்டின்* 2*ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின்* 45 *ஆம் பிரிவு மற்றும்* 2023 *ஆம் ஆண்டின் சமாதான நீதவான்களை (நியமித்தல், இடை நிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக்கோவை) ஒழுங்குவிதிகள் மற்றும் அதன் பிந்தைய திருத்தங்களின் அடிப்படையில் நீதி அமைச்சரால்*

தீமானிக்கப்பட்ட நபர்கள் சமாதான நீதவான்களாக இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

குறித்த வர்த்தமானியின் அடிப்படையில் சமாதான நீதவானாக நியமனக் கடிதம் வழங்கப்படும்.

நியமனக் கடித்திற்கு அமைவாக உரிய நீதிமன்றத்தில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளப்படுவதுடன் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் 45(1) ஆம் பிரிவிற்கு அமைவாக வழங்கப்பட்ட சமாதான நீதவான் பதவியே செல்லுபடியானதாகும்.

குறிப்பு: 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் 45 (1) ஆம் பிரிவின் கீழ் பதவிநிலை அதிகாரத்தால் வழங்கப்படுகின்ற சமாதான நீதவான் பதவிக்கு சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளவேண்டிய அவசியமில்லை என்பதுடன் அவர்கள் குறித்த பதவியை வகிக்கும் காலப்பகுதி வரை மாத்திரமே அவர்களுக்கான சமாதான நீதவான் பதவியும் செல்லுபடியாகும்.

## 4. கடைமைகள், பணிகள் மற்றும் நடத்தைக்கோவை

2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமித்தல், இடைநிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக்கோவை) ஒழுங்குவிதிகளில் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சமாதான நீதவான்களுக்கான நடத்தைக்கோவையை சமாதான நீதவான்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும். குறித்த நடத்தைக்கோவையை பின்பற்ற தவறுதல் தவறான நடத்தையாக கருதப்படுவதுடன் அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் காரணமாக அமையும்.

## 4.1. ஆவணங்களைச் சான்றுப்படுத்தல்

- **பதிவு விவரங்கள்:** சமாதான நீதவான்கள் அனைவரும் தங்களால் சான்றுறுதிப்படுத்தப்படும் ஆவணத்தில் தமது முதலெழுத்துடன் முழுப் பெயர், கையொப்பம், திகதி, பதிவு இலக்கம், தொலைபேசி இலக்கம் மற்றும் பதவி முத்திரையைத் தெளிவாகப் பதிய வேண்டும் என்பதுடன் தமது உத்தியோகபூர்வ இலச்சினையை பொறியிடுவதும் இன்றியமையாததாகும்.

• ***மூல ஆவணங்களின் அவசியம்***: *சமாதான நீதவான்கள் அனைவரும் சமர்ப்பிக்கப்பட்ட மூல ஆவணத்தை ஆராய்ந்து பார்த்திருப்பினும் ஆவணத்தில் கையொப்பமிடும் நபரின் ஆளடையாளம் தொடர்பில் திருப்தியடையாவிடத்து ஒருபோதுமே ஆவணமொன்றை சான்றுப்படுத்தக் கூடாது.*

• ***நேரில் சமுகமளித்தல்***: *சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடுவதற்கு அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு ஆவணம் அல்லது வெளிப்படுத்தலும் அவர் முன்னிலையிலேயே மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.*

• ***தகவல்களில் உண்மைத்தன்மை***: *தமது அறிவிற்கு எட்டியவரை தவறான அல்லது மோசடியான தகவல்கள் அடங்கிய எந்தவொரு ஆவணத்தையோ அல்லது சத்தியக்கூற்றையோ சாட்சி பகரக்கூடாது, சான்றுப்படுத்தக்கூடாது, பிரகடனப்படுத்தக்கூடாது அல்லது கையொப்பமிடக்கூடாது.*

• ***நலன் சார்ந்த முரண்பாடுகள் ஏற்படா வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்:*** *தமக்குரிய ஆவணங்கள் அல்லது நெருங்கிய உறவினர்களின் ஆவணங்கள் சான்றுப்படுத்தலை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.*

• ***நியாயாதிக்க எல்லை*** : *தமது சமாதான நீதவான் நியமனமானது அகில இலங்கை ரீதியில் வழங்கப்பட்டிருப்பின் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலிருந்தும் ஆவணங்களைச் சான்றுப்படுத்த முடியும். தமது சமாதான நீதவான் நியமனமானது வலமொன்றிற்கு (நிருவாக மாவட்டமொன்றிற்கு) உரியதாய் மாத்திரம் வழங்கப்பட்டிருப்பின் நாட்டின் எந்தவொரு நபரின் ஆவணங்களையும் தமது சமாதான நீதவான் நியமனத்திற்குரிய வலயத்திற்கு (நிருவாக மாவட்டத்திற்கு) உள்ளேயே சான்றுப்படுத்திக்கொள்ள முடியும்..*

• ***மொழிப் பயன்பாடு / ஆங்கில மொழி ஆவணம்***: *எந்தவொரு சமாதான நீதவானும் ஆங்கில மொழியில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நீதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரிடமிருந்து எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

## 4.2. சத்தியக்கூற்றுக்களை வழங்குதல்

*சத்தியக்கூற்றுக்கள் அனைத்தும் நீதித்துறைக் கட்டளைச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் கட்டளையிடப்பட்ட சட்டவிதிகளுக்கு உட்பட்டு காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக வழங்கப்பட வேண்டும்.*

***மாற்றீட்டு / விசேட சத்தியப் பிரமாணங்கள்***

*ஏதோனுமொரு தரப்பினர் அல்லது சாட்சியாளர் தமக்குரிய இனம் அல்லது சமய நம்பிக்கைக்கு பொதுவான அல்லது மனதளவில் ஏற்றுகொள்ளக் கூடியதெனக் கருதும் ஏதேனுமொரு வகையில் சத்தியப்பிரமாணம் அல்லது நிரந்தரப் பிரகடனத்தினடிப்படையில் சாட்சியமளிக்க முன்வருவராயின், குறித்த சத்தியப் பிரமாணம் நீதிக்கோ அல்லது வெளிப்படைத் தன்மைக்கோ முரண்படாதிருப்பின் மற்றும் எந்தவொரு மூன்றாம் தரப்பிற்கும் தாக்கம் செலுத்தாதெனவும் கருதப்படுமாயின் நீதிமன்றம் பொருத்தமானது எனக் கருதின், அத்தகைய சத்தியப் பிரமாணம் அல்லது நிரந்தர பிரகடனமொன்றை அவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.*

## 4.3. பொதுச்சேவை கோட்பாடுகளாக சமாதான நீதவான் ஒருவரால் பின்வரும் விடயங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- ***தகவல்களை வெளிக்கொணரும் ஒருவராக செயற்படுதல்**: சமூக விரோதச் செயல்களைத் தடுப்பதற்கும் மற்றும் குறைப்பதற்கும் உரிய அதிகாரிகளுக்குத் தகவல்களை வழங்கி அவர்களுடன் ஒற்றுமையாக செயற்படுதல்.*

- ***சமாதான உத்தியோகத்தராக செயற்படுதல்**: பிணக்கு நிலைமைகளின் போது உரிய தரப்புக்களின் நம்பிக்கையை வென்ற நபராக செயற்பட்டு பிணக்குத் தவிர்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு ஈடுபடுதல் வேண்டும்.*

- *ஒழுக்கமாகவும், மரியாதையாகவும் மற்றும் பெருமையுடனும் சேவையாற்றுவதுடன் விண்ணப்பங்களுக்கு உரியநேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளல்.*

• தங்களது திறமையால் ஆகக்கூடிய தொழில்தர்மமாகவும், நியாயமாகவும், உடனடியாகவும் மற்றும் விரைவாகவும் செயற்படல்.

• நேர்மையாகவும், சுதந்திரமாகவும் செயற்படல்.

• எப்பொழுதும் பொதுமக்களின் நன்மைக்காகச் செயற்படுதல் மற்றும் சுதந்திரமாகவும் நடுநிலையாகவும் இருத்தல்.

தகவல்களின் இரகசியத்தன்மை மற்றும் ஆள்களின் தனியுரிமையை பாதுகாத்தல் சட்டத்தால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை மாத்திரம் வெளியிடுதல்.

**5. சமாதான நீதவானொருவரால் மேற்கொள்ளப்படக் கூடாதவை**

• சமாதான நீதவான் பதவியைப் பயன்படுத்திச் சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

• சேவை வழங்கலுக்காகவோ அல்லது வழங்கப்பட்ட சேவையொன்றிற்காகவோ கட்டணம் அறவிடல், அல்லது பரிசுப்பொருட்கள் அல்லது வேறேதேனும் இலாபகரமான பயன்களை பெறுதல்.

• நேர்மையற்ற அல்லது சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுதல்.

• ஏதேனும் வியாபார, வர்த்தக அல்லது தனிப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று அல்லது பிணக்கின்போது தமது தேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஒரு விசேட அதிகாரமாக, நம்பகத்தன்மையாக அல்லது குறிப்பிடுவதற்கு சமாதான நீதவான் பதவியைப் பயன்படுத்துதல்.

• சமாதான நீதவான் பதவியைப் பயன்படுத்தி தனிப்பட்ட இலாப நோக்கத்தை அடையும்பொருட்டு ஏதேனுமோர் சங்கத்தை இணைத்துக்கொள்ளுதல் அல்லது உருவாக்குதல்.

• பதவிக்குக் களங்கமொன்றை ஏற்படுத்தல் அல்லது பொதுமக்களை அவமதித்தல் அல்லது பொதுமக்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் இலத்திரனியல் ஊடகங்களில் கருத்துக்களை வெளியிடுதல் மற்றும் சமுகத்தில் செயற்படல்.

## 6. தகவற்பதிவு இற்றைப்படுத்தல் மற்றும் ஆயுட்சான்றிதழ் சமர்பித்தல்

6.1. நீதி அமைச்சினால் சமாதான நீதவான்களின் பின்வரும் விபரங்ளை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்படுவதுடன் அத்தகவல்களில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின் அல்லது ஏற்படின் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் ஊடாக விரைவில் நீதி அமைச்சிற்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்.

- முழுப்பெயர்
- பிறந்த திகதி
- தேசிய அடையாள அட்டை இலக்கம்
- வதிவிட முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் (கையடக்க மற்றும் நிலையான தொலைபேசி)
- நியமனத் திகதி பதிவு இலக்கம் மற்றும் நீதிமன்ற நியாயாதிக்க எல்லை
- இறந்த திகதி (தமது இறப்பு சம்பவிக்குமபோது கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்துமூலம் உடனடியாக நீதி அமைச்சிற்கு அத்தகவல்களை சமர்பிக்குமாறு சமாதான நீதவான்கள் அனைவரும் தமது குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களுக்குத் தெரியப்படுத்தியிருத்தல் வேண்டும்.

### 6.2. வாழ்நாள் சான்றிதழ் சமர்ப்பித்தல்

தகவல்களை இற்றைப்படுத்தும் செயற்பாட்டிற்காக சமாதான நீதவான்கள் அனைவருமே இங்கு I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக உரிய கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரால் சான்றுப்படுத்தப்பட்ட வாழ்நாள் சான்றிதழொன்றை இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை மார்ச் மாதம் முப்பத்தோராம் (31) திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளருக்குச் சமர்பித்தல் வேண்டும்.

குறித்த கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட வாழ்நாள் சான்றிதழானது சமாதான நீதவான் சிறந்த உடல் மற்றும் உள நிலையைக் கொண்டுள்ளதாக சான்றுப்படுத்தி இலங்கை

மருத்துவ பேரவையில் பதிவு செய்த வைத்தியர் ஒருவரால் வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழுடன் சமர்பித்தல் வேண்டும்.

**சமர்பிக்காததன் விளைவு:** அமைச்சர் நியாயமானதெனக் கருதும் காரணங்களின் அடிப்படை தவிர, மருத்துவச் சான்றிதழுடன் குறித்த வாழ்நாள் சான்றிதழை 02 வருடங்களுக்கு ஒருமுறை சமர்பிக்கத் தவறும் ஒவ்வொரு சமாதான நீதவான்களும் குறித்த சான்றிதழை சமர்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த இறுதித் திகதியிலிருந்து அதாவது குறித்த ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதியிலிருந்து பதவி விலகியோராகக் கருதப்படுவர். அத்தகையோர் அன்றிலிருந்து சமாதான நீதவான் பதவியில் கடைமையாற்றுவதானது அத்துமீறியதோர் செயற்பாடாகும்.

## 7. நியமனம் இடைநிறுத்தல் மற்றும் இரத்துச்செய்தல்

ஒவ்வொரு சமாதான நீதவான்களாலும் 2023 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமித்தல், இடைநிறுத்துல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக்கோவை) ஒழுங்குவிதிகளில் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சமாதான நீதவான்களுக்கான நடத்தைக்கோவைக் கட்மைப்பின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு மேற்கொள்ளத் தவறுதலானது வழங்கப்பட்ட பதவியில் நெறிபிறழ்வானதோர் செயற்பாடாக அமையும் என்பதுடன், அமைச்சரால் அவரது கையொப்பத்துடனான எழுத்துமூல அறிவித்தல் ஊடாக சமாதான நீதவான் பதவியிலிருந்து நீக்குவதற்கு கீழ்ப்படிதல் வேண்டும்.

**சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட ஒருவர்** :

- நியமனம் பெற்று 3 மாதங்களுக்குள் சத்தியப் பிரமாணம் செய்யத் தவறுதல்.

- தமது நியமனத்திற்குரிய ஏதேனும் நிபந்தனைக்குட்பட்டவற்றை மீறுதல்

- ஏதேனும் குற்றவியல் குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்படல்

- ஏதேனுமோர் நீதிமன்றம் வங்குறோத்து நிலைமையென பிரகடனப்படுத்தல்

• பதவிக் கடைமைகளை ஆற்றுவதற்குரிய உடல், உளத் தகைமையை இழத்தல்.

• தமது அதிகாரத்தைத் தான்தோன்றித்தனமாகப் பயன்படுத்திக் குற்றவாளியாதல்

• 7ஆம் கட்டளை விதியின் கீழ் குறித்துக் காட்டப்பட்டுள்ள சமாதான நீதவான்களுக்கான நடத்தைக் கோவை ஏதேனும் விதிகள் மீறப்பட்டு முறைகேடான செயலுக்கு குற்றவாளியாக கண்டறியப்படுகின்ற,

சந்தர்ப்பமொன்றில் அமைச்சர் சமாதான நீதவான் நியமனத்தை இரத்து செய்யலாம் அல்லது முடிவுறுத்தலாம்.

## 8. ஒழுக்கக்கட்டுப்பாடு

ஒவ்வொரு சமாதான நீதவான்கள் தொடர்பாகவும் ஒழுக்கக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் நீதி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும் என்பதுடன் அவரால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகச் செயற்படுதல் வேண்டும்.

நீதி அமைச்சின் செயலாளரின் கட்டளைகளைப் புறக்கணித்தல் தொடர்பாகவோ அல்லது 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சமாதான நீதவான்கள் (நியமித்தல், இடைநிறுத்துதல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகளை நெறிமுறைகளை மீறுதல் அல்லது பதவியைத் தவறாகப் பயன்படுத்துதல் தொடர்பாக நீதி அமைச்சிற்குக் கிடைக்கப்பெறும் யாதேனும் முறைப்பாடு, குற்றச்சாட்டு அல்லது மனுவின் மீது நீதி அமைச்சின் செயலாளரால் பெயரிடப்பட்ட அதிகாரியால் மேற்கொள்ளப்படும் விசாரணையைத் தொடர்ந்து ஒழுக்காற்று நடவடிக்கை மேறகொள்ளப்படும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப, விசாரணை முடிவடையும் வரைக்கும் அமைச்சரின் உடன்பாட்டுடன் சமாதான நீதவான் பதவியானது தற்காலிகமாக இடைநிறுத்திவைக்க நேரிடும்.

குறித்த விசாரணையில் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படின் நீதி அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சரின் சம்மதத்துடன் சமாதான நீதவான் பதவி இரத்துச் செய்யப்படும்.

## 9. பதவி விலகல்

*சமாதான நீதவானொருவர் மேற்குறித்த விடயத்திற்காக அமைச்சரிற்கு எழுத்துமூல கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடியும்.*

## 10. பொதுவான அறிவுறுத்தல்கள்

### 10.1. பதவி முத்திரை, கடிதத்தலைப்பு மற்றும் அறிவித்தல் பலகை:

• *சமாதான நீதவான் ஒருவரால் பதவிமுத்திரை மற்றும் கடிதத்தலைப்பு என்பவற்றை வன்பிரதியாயினும் அல்லது மின்னனுப் பிரதியாயினும் தமக்குரிய பதிவிலக்கத்தை அதில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அரச இலச்சினை பயன்படுத்தப்படாதிருத்தல் வேண்டும்.*

• ***பெயர்ப்பலகை:*** *சமாதான நீதவான் ஒருவருக்கு அவர் அப்பதவியில் சேவையாற்றுவதனை தெரியப்படுத்துவதற்காக தேவைக்கேற்ப வன் பிரதியாகவோ அல்லது மின்னணுப் பிரதியாகவோ அல்லது வியாபார அட்டைகள் அல்லது கடிதத்தலைப்புகளில் தமக்குரிய பெயரிற்கு பின்னர் பதவிப்பெயரை உள்ளிட்டு தமது அலுவலகம் அல்லது வதிவிடத்தில் சமாதான நீதவான் பெயர் ப்பலகையை காட்சிப்படுத்த முடியும்.*

**10.2.** *சமாதான நீதவானொருவரால் பின்வருமாறு ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது, அதுதொடர்பில் இயலுமானவரை விரைவாக செயலாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துதல் வேண்டும்,*

- *சமாதான நீதவானின் பெயரில் மாற்றம்.*
- *வதிவிட முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தில் மாற்றம்.*

## 11. *அட்டவணைகள்*

| | |
|---|---|
| அட்டவணை I | வாழ்நாள் சான்றிதழ்ப் படிவம் |
| அட்டவணை II | தகவல் இற்றைப்படுத்தல் விண்ணப்பப் படிவம் |
| அட்டவணை III | சத்தியக்கூற்று மாதிரிப் படிவம் |
| அட்டவணை IV | உரிய பதவி முத்திரையின் மாதிரி |
| அட்டவணை V | 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதியமைப்புச் சட்டத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள பதவி நிலையில் நியமிக்கப்படும் அகில இலங்கை சமாதான நீதவான்கள் |
| அட்டவணை VI | 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதியமைப்புச் சட்டத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள பதவி நிலையில் நியமிக்கப்படும் இலங்கையின் பிரிவுகளுக்கான சமாதான நீதவான்கள் |
| அட்டவணை VII | 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதியமைப்புச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் 1(அ) உப பிரிவுக்கு அமைவாக நீதி அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளைகளுக்கமைய பதவி வழியில் நியமிக்கப்படும் சமாதான நீதவான்கள் |

**அட்டவணை I**

**வாழ்நாள் சான்றிதழ்**

**........................ (ஆண்டு)**

*சமாதான நீதவான்கள் தொடர்பான கட்டளைகள் (நியமித்தல், இடைநிறுத்தல், இரத்துச் செய்தல் மற்றும் நடத்தைக்கோவை)*

*சமாதான நீதவான்களுக்கான அறிவுறுத்தல்கள்*

1. *இச்சான்றிதழானது, பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளில் காலாவதியாகும்.*

2. *விண்ணப்பப் படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யவும்.*

3. *கையொப்பம் மற்றும் பதவி முத்திரை முழுமையாக இடப்பட்டுள்ளதை உறுதிசெய்யவும். தவறும்பட்சத்தில் சான்றிதழ் நிராகரிக்கப்படும்.*

4. *தேசிய அடையாள அட்டை /கடவுச்சீட்டு என்பவற்றில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், உரிய பிரதிகளை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

5. *இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மார்ச்* 31 *ஆம் திகதிக்கு முன்னர் இச்சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து, கட்டளை* 6(2) *இற்கு அமைவாக சமாதான நீதவான் பதவியிலிருந்து விலகியதாகக் கருதப்படும்.*

**1. *அலுவலகத் தகவல்கள்:***

1.1 *பதிவு இல:* ........................................................................................

1.2 *நியமனத் திகதி:* ...................................................................................

1.3 *நீதிமன்ற நியாயாதிக்க எல்லைப் பிரதேசம்:* .......................................

**2. *தனிப்பட்ட தகவல்கள்:***

2.1 *முழுப் பெயர் (ஆங்கிலத்தில்):* .........................................................

2.2 *முழுப் பெயர் (சிங்களம் / தமிழில்):* .................................................

2.3 *தங்களது பெயர் மாற்றப்பட்டுள்ளதா? - ஆம் / இல்லை*

*மாற்றப்பட்டிருப்பின்,*

2.3.1 *முழுப் பெயர் (ஆங்கிலத்தில்): .......................................................*

2.3.2 *முழுப் பெயர் (சிங்களம் / தமிழில்): ...............................................*

2.4 *பிறந்த திகதி: ...........................................*

2.5 *நிரந்தர முகவரி: ...........................................*

2.6 *தற்காலிக முகவரி (இருப்பின்): ...........................................*

2.7 *தொடர்புகொள்ளும் விபரங்கள்:*

2.7.1 *கைத்தொலைபேசி: ................... நிலையான தொலைபேசி: ...................*

2.7.2 *மின்னஞ்சல் முகவரி: ...........................................*

**3. *இனங்காணல் தகவல்கள்:***

3.1 *தேசிய அடையாள அட்டை இல.: ...........................................*

3.2 *பிரஜாவுரிமை அட்டை: ...........................................*

3.3. *வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம் (இருப்பின்)*

| *வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம்* | *வழங்கப்பட்ட திகதி* | *காலாவதியாகும் திகதி* | *வழங்கிய நாடு* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

**4. *பிரகடனம்:***

*மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் பிரகடனப்படுத்துவதுடன், தேவையான ஆவணங்களின் பிரதிகளையும் இத்துடன் இணைத்துள்ளேன்.*

*சமாதான நீதவானின் கையொப்பம்: ...........................................*

*திகதி: ...........................................*

## 5. ***சான்றுப்படுத்தல்***

5.1 *கிராம உத்தியோகத்தரின் சான்றுப்படுத்தல்*

*பதிவு இல. ........................................... இன் கீழ் சமாதான நீதவான் பதவியை வகிக்கும்........................................... திரு /திருமதி/வண/கலாநிதி*

*அவர்களை நான் நேரில் பார்த்துள்ளேன் என்பதனையும், இன்றைய திகதியில் அவர் உயிர்வாழ்ந்துகொண்டு இருக்கின்றார் என்பதனையும், மேலோட்டமாக நோக்கும்போது தமது பதவிக்குரிய கடமைகளை ஆற்றுவதற்குரிய உடல் மற்றும் உளத் தகைமையுடன் காணப்படுகின்றார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.*

*கிராம உத்தியோகத்தரின் கையொப்பம்*

*திகதி: ...........................................*

5.2. *பிரதேச செயலாளரால் சான்றிதழ் அங்கிகரிக்கப்படுதல்*

*சமாதான நீதவான் உயிர் வாழ்ந்துவருகின்றார் எனவும், மேலோட்டமாக நோக்கும்போது பதவிக் கடமைகளை மேற்கொள்வதற்குரிய உடல் மற்றும் உளத்தகைமையுடன் காணப்படுகின்றார் எனவும் வழங்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலை நான் அங்கிகரிக்கின்றேன்.*

*பிரதேச செயலாளரின் கையொப்பம்*

*பதவி முத்திரை: ...........................................*

*திகதி: ...........................................*

MOJ

**அட்டவணை II**

**நீதி அமைச்சு**

**தகவல் இற்றைப்படுத்தல் விண்ணப்பம்**

முந்தைய நியமனத்திற்காக தங்களால் வழங்கப்பட்டுள்ள பின்வரும் தகவல்களில் ஏதேனும் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின், இப்படிவத்தில் திருத்தப்பட்ட தகவல்களை மாத்திரமே நிரப்புதல் வேண்டும் .

**1.பெயர்:** திருத்தப்பட வேண்டியவாறு பெயர் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்

**முழுப் பெயர் (சிங்களம் / தமிழ் மொழியில்) :**

**முழுப்பெயர் (ஆங்கில மொழியில்) :**

**2. நிரந்தர முகவரி :** திருத்தப்பட்ட முகவரி குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தியோகதரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும் .

**நிரந்தர முகவரி (சிங்களம் / தமிழ் மொழியில்) :**

**நிரந்தர முகவரி (ஆங்கில மொழியில்) :**

**திருத்தப்பட்ட வசிப்பிடத்திற்குரிய நீதி / பொலிஸ் / நிர்வாக வலயங்கள்:**

மேல் நீதிமன்றம் ☐ மாவட்ட நீதிமன்றம் ☐ நீதவான் நீதிமன்றம் ☐

பொலிஸ் நிலையம் ☐ மாவட்டம் ☐ பிரதேச செயலாளர் பிரிவு ☐

MOJ

3. ***அடையாள அட்டை இலக்கம் :*** திருத்தப்பட வேண்டிய இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும் .

**தேசிய அடையாள அட்டை இலக்கம் :**

4. **தொடர்பு விபரங்கள் :** திருத்தப்பட வேண்டிய தகவல்களை உள்ளிடவும் .

**கைத்தொலைபேசி இலக்கம் :**

**நிலையான தொலைபேசி இலக்கம் :**

மின்னஞ்சல் முகவரி :

**கல்வித் தகைமைகள் :** திருத்தப்பட வேண்டிய கல்வித் தகைமைகளை உள்ளிடவும் .

**க . பொ . த சாதாரண தரம்** — பரீட்சை சுட்டெண்-

| | |
|---|---|
| விஷேட சித்தி | |
| அதிதிறமைச் சித்தி | |
| திறமைச் சித்தி | |
| சாதாரண சித்தி | |
| சித்தியினமை | |

(கல்விச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

**க . பொ . த உயர்தரம்** — பரீட்சை சுட்டெண்-

| | |
|---|---|
| விஷேட சித்தி | |
| அதிதிறமைச் சித்தி | |
| திறமைச் சித்தி | |
| சாதாரண சித்தி | |
| சித்தியினமை | |

(கல்விச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

**மொழித் தேர்ச்சி**

**க . பொ . த சாதாரண தர** பரீட்சை சுட்டெண் ..................................
வருடம் ....................................
**தாய்மொழி (சிங்களம் / தமிழ்)** ......................... ஆங்கிலம்.........................

**தற்பொழுது பெற்றுக்கொண்டுள்ள அதிகூடிய கல்வித் தகைமைகள் :**

மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும் மற்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன் .

**திகதி :** ................................................

**கையொப்பம் :** ................................................

**அட்டவணை III**

**சத்தியக்கூற்று மாதிரியொன்று**

**சத்தியக்கூற்று**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின், இலக்கம் 142/6, மொரட்டுவ வீதி, பிலியந்தலை எனும் முகவரியைச் சேர்ந்த கந்தசாமி சரஸ்வதி ஆகிய நான், இந்து மதத்தைச் சேர்ந்தவராக நேர்மையாகவும், உண்மையாகவும், பய பக்தியுடனும் உறுதியுரையளித்து பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.

1. இச்சத்தியக்கூற்றில் மேலே பெயர் குறிப்பிடப்படும் சத்தியம்/ உறுதியுரையை வழங்குபவர் நானேயாவேன்.

2. எனது தேசிய அடையாள அட்டையின் இலக்கம் 37667550V ஆகும்.

3. எனது மகனாகிய கந்தசாமி செல்வநாயகம் என்பவரால் எனது பெயரில் அற்றோனித் தத்துவப்பத்திரமொன்று 2005, யூலை மாதம் 23 ஆம் திகதி பிலியந்தலையில் வைத்து கைச்சாத்திடப்பட்டதுடன் அத்தத்துவப் பத்திரத்தின் இலக்கம் 266 ஆகும்.

4. அத்தத்துவப்பத்திரம் 2007 ஆகஸ்ட் மாதம் 06ஆந் திகதி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. குறித்துரைக்கப்பட்ட 266 ஆம் இலக்க அற்றோணித்தத்துவப் பத்திரம் தற்பொழுது வரைக்கும் செல்லுபடியாக உள்ளதுடன், அது ஒருபோதும் இரத்துச் செய்யப்படவில்லை.

.......................................................................................

உறுதியுரை அளிப்பவர்

(சத்தியம் / உறுதியுரை அளிப்பவர் 50 ரூபா முத்திரையொன்றின்மீது கையொப்பமிடுதல் இன்றிமையாத்கும்.)

| | |
|---|---|
| மேற்படி சத்தியக்கூற்றானது வாசித்து விளங்கப்படுத்தப்பட்டதுடன், அவரால் மேற்படி குறித்துரைக்கப்பட்ட விடயம் விளங்கிக்கொள்ளப்பட்டு திருப்தியடைந்து 2007 செப்டெம்பர் 28 ஆம் திகதி கொழும்பில் என்முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது. | ........................................................<br>சமாதான நீதவான்<br>(பதவி முத்தரை) |

கவனத்திற்கு : - சத்தியக்கூற்றுக்கான கட்டணம் காலத்திற்குக் காலம் மாறுபடக்கூடும்.

**அட்டவணை IV**

***சரியான பதவி முத்திரையொன்றின் மாதிரி***

*தங்களது நியமனக் கடிதத்தின்பெயர்* **:** *சரமசிங்க முதியன்சேலாகே அசோக நந்தன விஜேவிக்கிரம சமரசிங்க என்ற பெயரானது ச. மு. அ.ந. வி. சமரசிங்க எனவும் அல்லது ச. மு. அ.நந்தன விஜேவிக்கிரம சமரசிங்க எனவும் பதவி முத்திரையில் குறிப்பிட முடியும்.*

*தங்களது முகவரி : முவரியை இலக்கம் 4, புதிய வீதி, அத்துருகிரிய என்பதாயின்,*

*தங்களது பதிவிலக்கம் : நியமனக் கடிதத்தின் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பதிவிலக்கம் 10/07/வமே.மா/அ.இ/23 என்பதாயின்,*

*ச. மு. அ.ந. வி. சமரசிங்க*
*சமாதான நீதவான்*
*இலக்கம் 4, புதிய வீதி,*
*அத்துருகிரிய*
*10/07/வமே.மா/அ.இ/23*
*தொலைபேசி இலக.கம்*

S. M. A. N. W. Samarasinghe
Justice of the Peace
No. 4, Nawa Mw,
Athurugiriya
10/07/WP/WI/23/

**அட்டவணை V**

**1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதி அமைப்புச் சட்டத்தின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பதவி வழியாக நியமிக்கப்படும் இலங்கையின் சமாதான நீதவான்கள்**

I. *பிரதம நீதியரசர்*

II. *பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்*

III. *உயர்நீதிமன்ற நீதிபதிகள்*

IV. *மேன்முறையீட்டு தவிசாளர்*

V. *மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள்*

VI. *பிரதிச் சபாநாயகர்*

VII. *பிரதி அமைச்சர்கள்*

VIII. *பிரதி குழுக்களின் தவிசாளர்*

IX. *பாராளுமன்ற உறுப்பினர்கள்*

X. *சட்டமா அதிபர்*

XI. *அமைச்சரவைச் செயலாளர்*

XII. *சனாதிபதியின் செயலாளர்*

XIII. *பிரதமரின் செயலாளர்*

XIV. *பாராளுமன்றப் பொதுச் செயலாளர்*

XV. *பல்வேறு அமைச்சுக்களின் செயலாளர்கள்*

XVI. *மேல்நீதிமன்ற நீதிபதிகள்*

XVII. *பொலிஸ் மா அதிபர்*

XVIII. *மன்றாடியார் நாயகம் (சொலிசிட்டர் ஜெனரல்)*

XIX. *பல்வேறு அமைச்சுகளின் மேலதிக செயலாளர்கள்*

XX. சட்டவரைஞர்

XXI. இலஞ்ச ஊழல் ஆணையாளர்

XXII. மேலதிக சொலிசிட்டர் ஜெனரல்

XXIII. மேலதிக சட்டவரைஞர்

XXIV. பொது நம்பிக்கை பொறுப்பாளர் (Public Trustee)

XXV. பதிவாளர் நாயகம்

XXVI. பிரதிச் சொலிசிட்டர் ஜெனரல்கள்

XXVII. பல்வேறு அமைச்சுகளின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள்

XXVIII. பாராளுமன்றப் பிரதிப்பொதுச் செயலாளர்

XXIX. உயர்நீதிமன்றப் பதிவாளர்

XXX. மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர்

XXXI. பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள்

XXXII. சிரேஷ்ட அரச சட்டமா அதிபர்கள்

XXXIII. அரச சட்டத்தரணிகள் மற்றும் பல்வேறு அமைச்சுகளின் உதவிச் செயலாளர்கள்

XXXIV. உயர்நீதிமன்றப் பிரதிப் பதிவாளர்

XXXV. மேல்முறையீட்டு நீதிமன்றப் பிரதிப் பதிவாளர்

XXXVI. பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உத்தியோகபூர்வமற்ற உதவிப் பொலிஸ் அதிகாரிகளல்லாத உதவிப் பொலிஸ் அதிகாரிகள்

XXXVII. மேல்நீதிமன்றப் பதிவாளர்

XXXVIII. பாராளுமன்றச் சபாநாயகரின் செயலாளர்

XXXIX. பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர்

XL. தொழில் நியாய சபைகளின் செயலாளர்

*அட்டவணை VI*

***இலங்கையின் பகுதிகளுக்காக பதவிவழியாக நியமிக்கப்படும் சமாதான நீதவான்கள்***

I. *மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், குடும்பநல நீதிமன்ற நீதிபதிகள், நீதவான்கள், ஆரம்பநீதிமன்ற நீதிபதிகள், தொழில்நியாய சபைத் தலைவர்கள் தமது நீதிமன்ற நியாயாதிக்கம் பிரயோகிக்கப்படும் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்காக.*

II. *மாவட்ட நீதிமன்றங்களின் நியாயாதிக்க எல்லைக்குள் பணியாற்றும் காதி நீதிபதிகள் அவர்களுக்குரிய மாவட்டங்களுக்காக.*

III. *மாவட்ட நீதிமன்றங்களின் நியாயாதிக்க எல்லைக்குள் வசித்துவரும் காதிச்சபை உறுப்பினர்கள் அவர்கள் வசிக்கும் மாவட்டங்களுக்காக.*

IV. *மேல்நீதிமன்ற மேலதிகப் பதிவாளர்கள் குறித்த நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்டது.*

V. *மாவட்ட நீதிமன்றங்கள், குடும்பநல நீதிமன்றங்கள், நீதவான் நீதிமன்றங்கள், ஆரம் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் பதிவாளர்கள் மற்றும் தொழில் நியாய சபைகளின் நீதிமன்ற உதவிச் செயலாளர்கள் அந்தந்த நீதிமன்றங்கள் அல்லது தொழில் நியாய அதிகாரசபைகளின் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைகளுக்காக.*

VI. *மாவட்டச் செயலாளர்கள் தங்கள் தாங்கள் கடைமையாற்றும் நிர்வாக மாவட்டத்திற்காக.*

VII. *மேலதிக மாவட்டச் தங்கள் தாங்கள் கடைமையாற்றும் நிர்வாக மாவட்டத்திற்காக.*

VIII. *பிரதேச செயலாளர்கள் அவரவர் பிரிவுகளுக்கான எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்காக.*

IX. 1991 *ஆம் ஆண்டின்* 29 *ஆம் இலக்க நீதியமைப்பு (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்குமுரிய பிரதேசத்திற்கானது, மாநகரசபை மற்றும் நகரசபைத் தலைவர்களுக்குரிய எல்லைப்பிரதேசத்திற்கானது, பிரதேசசபைத் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், ஏனைய உறுப்பினர்கள் தமது அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்காக.*

*மேற்போன்றோரால் பதவிநிலை வழியே சமாதான நீதவானாக கடைமையாற்றப்படுகின்றது .*

அட்டவணை VII

1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதியமைப்புச் சட்டத்தின் 45 ஆம் பிரிவின் 1(அ) உபபிரிவுக்கு அமைவாக நீதி அமைச்சரால் ஆக்கப்படும் கட்டளைக்கு அமைவாக பதவிநிலை வழியாக நியமிக்கப்படும் சமாதான நீதவான்கள்.

| இல. | பதவிப் பெயர் | அதிகார எல்லை | வர்த்தமானி அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | பரீட்சை ஆணையாளர்கள் | அகில இலங்கை | 2021.05.03 ஆம் திகதிய 2226/12 ஆம் இலக்கம் |
| 02 | பிரதிப் பரீட்சை ஆணையாளர்கள் | அகில இலங்கை | 2021.05.03 ஆம் திகதிய 2226/12 ஆம் இலக்கம் |
| 03 | கிராம உத்தியோகத்தர்கள் | தத்தமது பிரதேச செயலகப் பிரிவு | 2016.02.18 ஆம் திகதிய 1954/34 ஆம் இலக்கம் |
| 04 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை அலுவலர்கள் | நியமிக்கப்பட்டுள்ள நிர்வாக மாவட்டம் | 2023.08.29 ஆம் திகதிய 2347/10 ஆம் இலக்கம் |
| 05 | தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பு அலுவலர்கள் | நியமிக்கப்பட்டுள்ள நிர்வாக மாவட்டம் | 2023.08.29 ஆம் திகதிய 2347/10 ஆம் இலக்கம் |
| 06 | நிர்வாகக் கிராம உத்தியோகத்தர்கள் | அகில இலங்கை | 2023.07.04 ஆம் திகதிய 2339/06 ஆம் இலக்கம் |
| 07 | மத்தியஸ்த சபை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் | நியமிக்கப்பட்டுள்ள மத்தியஸ்த சபை அதிகார எல்லை | 2025.06.13 ஆம் திகதிய 2440/27 ஆம் இலக்கம் |

MOJ